309

உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு பங்குனித் திங்கள் மார்ச்-1954 | இதழ் 12

திருப்புகழ்

பொது

விழையுமனி தரையுமுநி வரையுமவ ருயிர்துணிய
வெட்டிப் பிளந்துளம் பிட்டுப் பறிந்திடுஞ்
செங்கண்வேலும்-
விரையளக முகிலுமிள நகையும்ருக மதகனவி
சித்ரத் தனங்களுந் தித்தித்த தொண்டையும்
புண்டரீகச்;
சுழிமடுவு மிடையுமழ கியமகளிர் தருகலவி
சுட்டித் திரிந்திஙன் தட்டுப் படுங்கொடும்
பங்கவாழ்வுந்-
தொலைவில்பிற வியுமகல வொருமவுன பரமசுக
சுத்தப் பெரும்பதஞ் சித்திக்க அன்புடன்
சிந்தியாதோ;
எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களுந்
துங்கநீள்பன்-
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக் குதம்பையும் பத்மக் கரங்களுஞ்
செம்பொனூலும்;

மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ்
செங்கைவேலும்-
முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெருஞ் சற்புத்ர வும்பர்தந்
தம்பிரானே.

பதவுரை

எழுத அரிய அறுமுகமும் - ஓவியவல்லுநரால் எழுத இயலாத ஆறுமுகங்களும், அணிநுதலும் - அழகிய நெற்றியும், வயிரம் இடையிட்டு சமைந்த செம் சுட்டி கலன்களும் - வயிரமணியை நடுவில் அமைத்துச் செய்த செவ்வையான சுட்டி முதலிய அணிகலன்களும், துங்கநீள் பன்னிரு கருணை விழிமலரும் - தூய்மையும் கருணையும் நிறைந்த நீண்ட பன்னிரு கண்மலர்களும், இலகு பதினிரு குழையும்- விளங்குகின்ற பன்னிரண்டு குழைகளும், ரத்ந குதம்பையும் - இரத்ன மணியாலாகிய குதம்பை என்ற காதணியும், பத்ம கரங்களும்-தாமரை போன்ற திருக்கரங்களும், செம்பொன் நூலும் - சிவந்த பொன்னாலாகிய முப்புரி நூலும், மொழிபுகழும் உடை மணியும் - சொற்களால் புனைந்து புகழ்கின்ற உடைமணியும், அரைவடமும்-திருவரையில் கட்டுகின்ற நாணும், அடி இணையும் - இரண்டு திருவடிகளும், முத்த சதங்கையும் - முத்துக்கள் பதித்த சதங்கைகளும், சித்ர சிகண்டியும் - அழகிய மயிலும்; செம் கை வேலும் - சிவந்த திருக்கரத்தில் இலகும் வேலாயுதமும், முழுதும் அழகிய குமர-ஆகிய அனைத்தும் அழகாகத் திகழும் குமாரக்கடவுளே! கிரிகுமரி உடன் உருகு - மலையரையன் மகளாகிய உமையம்மையாருடன் உள்ளம் உருகி மகிழ்கின்ற, முக்கண்சிவன் பெறும் சற்புத்ர - மூன்று கண்களை யுடைய முழுமுதற் கடவுள் பெற்ற உயர்ந்த புதல்வரே! உம்பர் தம் பெருமாளே - தேவர்கள் போற்றும் பெருமை மிக்கவரே! விழையு மனிதரையும் - விரும்புகின்ற மனிதர்களையும், முநிவரையும் - துறந்த முனிவர்களையும், அவர் உயிர் துணிய - அவர்கள் உயிரையும் விடுவதற்குத் துணியும்படி (மோகத்தை மூட்டி) வெட்டி பிளந்து உள் அம்பு இட்டு - உள்ளத்தை வெட்டிப்பிளந்து (விரகவேதனையாகிய) அம்பை உள்ளே செலுத்தி அழிக்கின்ற, செம்கண் வேலும் - சிவந்த கண்களாகிய வேலும், விரை அளக முகிலும் - வாசனை புனைந்த கூந்தலாகிய மேகமும், இளநகையும் - புன் சிரிப்பும், ம்ருகமத கன விசித்ர தனங்களும் - கஸ்தூரி யணிந்த அழகிய பெரிய தனங்களும், தித்தித்த தொண்டையும் - இனிமையான இதழாகிய கொவ்வைக் கனியும், புண்டரீக சுழி மடுவும் - தாமரை போன்று சுழிந்திருக்கின்ற உந்தியாகிய மடுவும், இடையும் - இடுப்பும், அழகிய மகளிர் தரு கலவி - அழகிய பொது

மாதர் தருகின்ற கலவி இன்பத்தை, சுட்டி திரிந்து இங்ஙன் தட்டுப் படும் கொடும் பங்கவாழ்வும் - மதித்து அவ்வின்பத்தைப் பெறும் பொருட்டு ஒழியாது திரிந்து இவ்வுலகில் தடைபட்டழியும் கொடிய குற்றமுடைய வாழ்வும், தொலைவு இல் பிறவியும் அகல - தொலையாது வருகின்ற பிறவித்துயரும் நீங்குமாறு, ஒரு மவுன - ஒப்பற்ற மவுனத் தால் வருகின்ற, பரமசுக சுத்த பெரும்பதம் சித்திக்க - பெரிய இன்ப மாகிய தூய பெரும்பதவி அடியேனுக்கு வாய்க்குமாறு, அன்புடன் சிந்தியாதோ - தேவரீருடைய திருவருள் நிறைந்த உள்ளம் அன்புடன் சிந்திக்கமாட்டாதோ?

பொழிப்புரை

(ஓவிய வல்லுநர்களால்) எழுத வொண்ணுத ஆறு திருமுகங்களும், அழகிய நெற்றியும், நடுவில் வயிரமணி பதித் துச் செய்த செவ்வையான சுட்டி முதலிய அணிகலன்களும், தூய்மையும் கருணையும் நிறைந்த நீண்ட பன்னிரண்டு மலர் போன்ற கண்களும், அழகிய பன்னிரு குண்டலங்களும், இரத் தின மணியால் செய்த குதம்பை யென்ற காதணியும், தாமரை மலர் போன்ற திருக்கரங்களும், சிவந்த பொன்னுலாகிய முப்புரி நூலும், சொற்களால் புனைந்து புகழ்கின்ற உடைமணியும், திருவரையில் கட்டுகின்ற நாணும், இரண்டு திருவடிகளும், அத் திருவடியில் விளங்குகின்ற முத்துக்கள் பதித்த சதங்கை யும், விசித்ரமான மயிலும், சிவந்த திருக்கரத்தில் ஏந்திய வேலாயுதமும், ஆகிய எல்லாம் அழகிய குமாரக் கடவுளே! மலைமகளாகிய மரகத வல்லியுடன் உள்ளம் உருகுகின்ற முக் கண்ணுடைய முழுமுதற் கடவுள் பெற்ற சிறந்த புதல்வரே! தேவர்கள் போற்றும் பெருமித முடையவரே! விரும்புகின்ற மனிதரையும் முனிவர்களையும் தமது உயிர் விடத் துணியும்படி மோகத்தை மூட்டி, அவர்கள் உள்ளத்தைப் பிளந்து விரக தாபமாகிய அம்பை விடுத்து அழிக்கின்ற சிவந்த கண் களாகிய வேலும், வாசனை பொருந்திய கூந்தலாகிய மேகமும், புன்னகையும், கஸ்தூரி யணிந்து பருத்து அழகாகத் திகழும் தனங்களும், தித்திக்கின்ற இதழாகிய கொவ்வைக் கனியும், தாமரை போன்று சுழித்திருக்கின்ற உந்தியாகிய மடுவும், இடையும் என்ற உறுப்புக்கள் யாவும் அழகுடன் பொலிகின்ற பொது மகளிர் தருகின்ற கலவி யின்பத்தைப் பெரிதாக மதித்து அதனைப் பெறும்பொருட்டு ஓயாது திரிந்து இவ் வுலகில் தடைபட்டு அழிகின்ற கொடிய பழுதுடன் கூடிய வாழ்வும், தொலைவில்லாது வருகின்ற பிறவி நோயும் அகன்று உய்ய, ஒப்பற்ற மவுனத்தால் வரும் பெரிய சுகமாகிய தூய சிவ பதம் அடியேனுக்கு வாய்க்குமாறு தேவரீருடைய திருவுள்ளம் சிந்திக்காதோ?

விரிவுரை

விழையு மனிதரையும் முநிவரையு மவருயிர் துணிய:—

பொதுமகளிர் மீது ஆசையால், மனிதரும், முற்றத் துறந்த முநிவருங்கூட, மோகத் தீயினால் வெதும்பி, தமது உயிரையும் விடுவதற்குத் துணிந்து நிற்பர். அத்துணை யளவுக்கு அவருடைய வுள்ளத்தில் ஆசைக் கனலை அம்மகளிர் மூட்டி விடுவர். திலோத்தமை மூட்டிய ஆசைக் கனலால் ஊசலாடிய சுந்தோபசுந்தர்கள் மாண்டதுவே போதுமான சான்று.

செங்கண் வேலும்:—

அப் பரத்தையர் கண்கள், வேல் போலே தம்மை விரும்பியோரைச் சேதிக்கும் இயல்புடையது.

புண்டரீகச் சுழிமடுவும்:—

மடு—ஆழ்ந்த நீர்நிலை. அதில் வீழ்ந்தார் மாய்ந்தொழிவர். விலைமகளிர் உந்தி அம் மடுவுக்கு நிகர் என்று இங்கே குறிப்பிடுகின்றனர். சுழியுடைய நீர்நிலையில் இறங்கினவர் அச் சுழியில் அகப்பட்டு அழிவர். அதுபோலே விலைமகளிர் வலைப் பட்டோரும் அழிவர்.

"உந்தியென்கின்ற மடு விழுவேனை" —திருப்புகழ்.

கோடும் பங்க வாழ்வும்:—

பங்கம்—பழுது.

இந்த மோக வாழ்வு கொடியது; பழுதுடையது; மின்னலைப் போல் தோன்றி மறைவது; அசுத்தமானது; நோய் செய்வது; துன்பத்தைத் தருவது; கொலை முதலிய கொடுமைகளுக்கு உறைவிடமானது.

"பாழ் வாழ் வெனுமிப் படுமாயை"
"மின்னே நிகர் வாழ்வை"

என்று கந்தரநுபூதியில் அடிகளார் கூறுகின்றார்.

இறைவனுடைய திருவடிப் பேறு என்ற தூய வாழ்வு என்றும் இன்பம் பயப்பது; தெவிட்டாதது; பரிசுத்தமானது; சாந்தி முதலிய நலன்களுடன் கூடியது. ஆகவே தீய வாழ்வைத் துறந்து தூய வாழ்வைப் பெறவேண்டுவது இன்றியமையாத கடப்பாடாகும்.

தோலைவில் பிறவி:—

கடவுள் என்று உண்டோ அன்றே உயிர்களாகிய நாமுமுண்டு. "என்று நீ அன்று நான்" என்கின்றார் தாயுமானார்.

ஆனால் கடவுள் பிறப்பிறப் பில்லாதவர். நாம் பிறப்பதும் இறப்பதுமாகிய சுழியில் அகப்பட்டுத் தவிக்கின்றோம். எண்ணில் காலமாக எண்ணில்லாத பிறப்பெடுத்து எண்ணில்லாத வினைபுரிந்து எய்த்து இளைத்துவிட்டோம்.

இப்பிறவித் துன்பத்தைத் தொலைக்க வல்ல பிரான் முருகவேளேயாகும். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்றமையால் அவர் பிறவித் துயர் களையும் பெருந்தகை யாவார். பிறவி யெடுக்கும் பிற தெய்வங்கள், நம் பிறவியை மாற்றமாட்டா. ஒரு கடன்காரன் இன்னொரு கடன்காரனுடைய கவலையை மாற்றமுடியாதது போல் என்று உணர்க.

ஒரு மவுன பரமசுக சுத்தப் பெரும்பதம்:—

மேலான இன்பம் மௌனத்தினால் விளைகின்றது. அதுவே அருணகிரிநாதர் பெற்றது. ஞானத்தின் சிகரம் மோனம். "மோனமென்பது ஞான வரம்பு" என்கின்றார் ஔவையார். மௌனம் என்பது மனத்தொடர்பு இல்லாதது எனப்படும். வாய் பேசாமலிருப்பது மௌனம் அன்று.

மோனநிலையுற்றார் அதற்குமேல் பெறும் பெரும்பேறு ஒன்றுமின்று; நிறைகுடம் நீர்கொள்ளாதது போல் என்று அறிக.

நிறைகுடந்தான் நீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதை முயல்வார்—பிறையணிந்த
மிடக்கயி லாயமலை வித்தகனே வேதியனே
செக்கரணி மேனியனே செப்பு. —தாயுமானர்.

"......................................மௌனத்தையுற்று
நின்னையுணர்ந் துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந்தேன் இறந்தேவிட்ட திவ்வுடம்பே.
—அலங்காரம்.

எழுதரிய அறுமுகமும்:—

முருகப்பெருமானுடைய திருமுகமும் திருமேனியும் இத்தன்மைத்தென்று எவராலும் எழுதமுடியாதது.

"அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"
—அப்பரடிகள்.

அணிநுதலும்:—

இளம்பூரணனுடைய நெற்றி திருநீற்றுப் பொலிவுடன் மிகவும் அழகாக விளங்கும்.

வயிரமிடையிட்டுச் சமைந்த செஞ்சுட்டிக் கலன்களும்:—

சுட்டி என்பது நெற்றி நடுவில் தொங்குகின்ற ஆபரணம். அதன் நடுவே வயிரமணி பதித்து மிகவும் ஒளிமயமாகத் திகழ்கின்றது.

துங்கநீள் பன்னிரு கருணை விழிமலரும்:—

இறைவனுடைய திருக்கண்கள் கருணை நிறைந்து வழிந்து பெருகி வெள்ளம் போல் ஓட விளங்குவது.

"மறுவறு கடலென மருவுபன்னிரு விழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால்" —கொலுவகுப்பு.

இலகுபதி னிருகுழையும்:—

முருகவேளுடைய பன்னிரு செவிகளிலும் மகர மீன் வடிவில் அமைந்து பன்னிரு குழைகள் திகழ்ந்து அழகுபுரியும்.

ரத்னக் குதம்பையும்:—

குதம்பை—செவியில் தொங்குகின்ற ஆபரணம். குழந்தை வேலன் ஆதலின் அவர் செவிகளில் காதணிகள் தொங்கி அசைகின்றன.

செம்பொனூலும்:—

திருமார்பில் செம்பொன்னூலாகிய முப்புரிநூல் அசைந்து ஒளிரும்.

"உறுவரை யருவியை நிகர்தரு முரமிசை
உடன்கொள் புரிநூல் கிடந்த தொருபால்"
— கொலுவகுப்பு.

மொழிபுகழு முடை மணியும்:—

முருகவேள் என்றும் இளையவர் ஆதலின் அவருடைய திருவரையில் கிண்கிணி மணிகள் இனிது ஒலிக்கும். அவ்வொலி பதினாலு உலகங்களும் கேட்டது.

மண்கமழ் முந்தித் திருமால் வலம்புரி யோசை யந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினாலுலகமுங் கேட்டதுவே.

முழுதும் அழகிய குமர:—

முருகு - அழகு. முருகன் - அழகன். அழகுக்கு ஒரு உறைவிடமான தெய்வம் முருகக் கடவுள். அவருடைய திருமேனி அழகுக்கு ஒரு கருவூலம்.

அப் பரமபதியின் திருவுருவை நேரே கண்ட சூரபன்மன் கூறுகின்றான். "ஆயிரங்கோடி மன்மதர்களுடைய அழகுகள் ஒருங்கு கூடினாலும் முருகவேளுடைய திருவடியின் அழகுக்கு இணை வராது."

ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்ற தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

— கந்தபுராணம்.

முகத்திலே அழகு மிகுந்தவள் இலக்குமி;
கண்களில் அழகு மிகுந்தவர் திருமால்;
சொல்லிலே அழகு மிகுந்தவள் கலைமகள்;
சொற் பொருளிலே அழகு மிகுந்தவர் சிவபெருமான்;
கையிலே அழகு மிகுந்தவர் பிரமதேவர்;
தோளிலே அழகு மிகுந்தவள் இந்திராணி;
ஆயுதத்திலே அழகு மிகுந்தவன் இந்திரன்;
வடிவிலே அழகு மிக்கவன் சூரியன்;

இத்தனை பேரும் ஒவ்வொரு பகுதிகளில் மட்டும் அழகுடையவர்கள். எந்தை கந்தவேள் எல்லாப் பகுதிகளிலும் திரண்டு உருண்ட அழகுடையவராதலால், மேலே கூறிய அத்தனை பேரும், முருகவேள் சந்நிதியில் வந்து, தத்தமக்கே உரியதான அழகினை ஒருங்கே முருகவேளிடங் கண்டு களிக்கின்றார்கள்.

கமல மடமங்கை வதனத் தழகு காண்பள்; அக்
    கரியமுகில் வண்ணனுஞ் செங்
கண்ணழகு காண்பன்; வளர் கலைவாணி சொல்லழகு
    காண்பள்; முக்கட் டாதையும்
விமலமுறு சொற்பொருளின் அழகு காண்பன்; விதி
    வியன்கரத் தழகு காண்பன்;
வீறுதோள் அழகிந்தி ராணி காண்பள்; உம்பர்
    வேந்து வேல் அழகு காண்பன்;

நிமலமன அடியரடியழகு காண்பார்; கவுரி
நின்றுமின் னழகு காண்பாள்;
நின்னெத்த ஆதித்தன் வடிவழகு காண்பன்; ஒரு
நீயு மவருடன் குழுமியே
அமலமென் னகையழகு காணலாம் சமயமீ
தம்புலீ யாட வாவே
அம்புய தடங்குலவு கம்பைவளர் கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

—கம்பை முருகன் பிள்ளைத்தமிழ்.

அழகை விரும்புவோர் முருகவேளை உபாசித்தால் உண்மையான - இயற்கையான அழகைப் பெறுவர்.

இப் பாடலில் முன்னே அழிகின்ற - அழிவைச்செய்கின்ற மகளிர் அழகை எடுத்துக் கூறி, பின்னே, அழியாத - அழியாமையைத் தருகின்ற முருக னழகை எடுத்துக் கூறி நம்மனோர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் அருணகிரிநாதர் பதிக்கின்றார்.

கருத்துரை

அழகிய குமாரக்கடவுளே! சிவபுதல்வரே! மகளிராது வாழ்வும் பிறவியுந் தொலைய அடியேனுக்கு மவுன சுகானந்தப் பெருவாழ்வைத் தந்தருள்வீர்.

அறமொழிகள்

58. இல்லற வாழ்க்கையில் பண்பட்டால் துறவற வாழ்க்கையைத் துய்க்க திடசித்தம் ஏற்படும். பள்ளி பயிற்சியால் தானே பிற்காலத்தில் பரிணமிக்க முடிகின்றது.

59. கண்ணியமான இல்லற வாழ்வுக்கு கருத்தொருமித்த தம்பதிகள் வேண்டும். பல தம்பதிகள் பிணக்கின் மயமாக இல்லறத்தை மாற்றி விடுகின்றனர். காரணம் புண்ணியமில்லாக் குறையே யாகும்.

60. அன்பு, அறம், அடக்கம், ஒழுக்கம் இந்நான்கும் இல்லாதவர்கள், இல்லற இயந்திரத்தை இணக்கமாக இயக்க இயலாது. அச்சாணியும் சக்கரமும் இல்லாத வண்டி எங்காயினும் ஓடுமா?

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

கலிக்கம்ப நாயனர் புராணம்

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்
.......................அடியார்க்கும் அடியேன்"

பெண்ணகடம் என்பது ஒரு பழைமையான தலம். ஒழுக்க முடைய நற்குடி மக்கள் வாழ்கின்ற அப்பதியில் தருமநெறி தங்கியிருந்தது. முகில் தவழும் சோலைகள் சூழ்ந்திருந்தன.

வளம் பொருந்திய அத்திருத்தலத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் **கலிக்கம்ப நாயனர்**. சடை முடியுடைய விடையவர் திருவடியை மறவாத சிந்தையராய், அளவற்ற காதல் கொண்டு திருத்தூங்கானைமாடம் என்ற திருக்கோயிலில் திருத்தொண்டு பல புரிந்து வாழ்ந்து வந்தார்.

அரனர் அடியார்க்கு அளவற்ற அன்புடன், இனிய கனி, கறி, நெய், பால், தயிர், தேன், சர்க்கரை முதலியவைகளுடன் உயர்ந்த உணவுகளைப் படைத்து அமுது செய்விப்பார். அன்றியும் அவர்கள் புரியும் திருத்தொண்டிற்காக வேண்டுஞ் செம் பொன்னும் இன்பமுடன் தருவார்.

ஆன அன்பர் தாமென்றும் அரனர் அன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனின் இனிய கனிகட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்ப முறஅளிப்பார்.

இன்னும் அடியார்கள் விரும்புகின்ற பொருள்கள் யாவுந் தந்து அரிய தொண்டு புரிந்து வந்தார்.

ஒருநாள் தமது திருமாளிகையில் அமுது செய்ய வந்த அடியார்களை வழக்கம்போல் அழைத்து திருவடிகளை நீர்வார்த்துப் பூசிக்க முயல்வாராயினர்.

அவருடைய திருந்திய சிந்தையுடைய மனைவியார் வீட்டை விளக்கி, இனிய உணவுகளை அமைத்து, கரகத்தில் நீர் கொணர்ந்து, கணவனர் திருத்தொண்டர்கட்குப் பாத பூசை செய்யும்போது கரகநீரைச் சொரிந்து உபசரித்தனர்.

முன்பு தம்மிடத்தில் வேலை செய்து வந்த ஒருவர், ஏவலை வெறுத்துச் சென்று சிவனடியாராகி அன்பருடனே கலந்து திருநீறும் கண்டிகையும் புனைந்து அக் கூட்டத்தில் இருந்தனர். அவருடைய திருவடியைத் தொட்டு கரக நீரை விடுத்துப்

பூசிக்க மனைவியார் இசையாது, "இவர் நம்மிடம் பணி செய்த வர்" என்று கருதி நின்றனர்.

கலிக்கம்ப நாயனர், "அடியார்களை முன்னிலைமை குறித்து வழிபடாமல் இருப்பது பிழை. யாவரேயாயினும் அடியார்கள் என்றல் வழிபடத் தக்கவரே யாகும். அடியார் அடிமலர்மீது நீர்வார்க்க இவள் மறுத்தாள்" என்று கருதி, வடிவாள் எடுத்து மனைவியார் கரமலரைத் துணித்தனர். பின்னர் தாமே கரகநீரை வார்த்து அவருடைய அடிமலரைப் பூசித்தார். அவர் அமுது செய்யத் தாமே யாவும் படைத்து உபசரித்தனர்.

இவ்வாறு நெடுநாள்கள் அடியார்க்கு அமுது அளித்தும் திருத்தொண்டு புரிந்தும் அன்பு செய்து நீலகண்டப்பெருமான் சிலமார் திருவடி சேர்ந்தனர்.

விளக்கம்

திருப்பெண்ணுகடம்:—

இத்தலம் நடுநாட்டில் உள்ளது. புகைவண்டி நிலைய முண்டு. மெய்கண்ட தேவர் அவதரித்த தலம். அப்பரடி களுக்கு இடபக்குறி பொறித்த இடமுமாகும். இங்குள்ள கோயிலுக்கு திருத்தூங்கானை மாடம் என்பது பேர். சுவாமி பெயர் சுடர்க்கொழுந்தீசர்; அம்மை பெயர் - கடந்தை நாயகி.

கலிக்கம்ப நாயனர்:—

இவர், அடியார்களைச் சிவமாகவே எண்ணி நாளும் இனிய கனியமுதன்ன உணவு தந்து, ஆடையும் பொன்னும் வழங்கி பணிபுரிந்து வந்தவர். அவ்வாறு புரிகின்றபோது அடியவர் களது முன்னை நிலையைக் குறியாது அளவற்ற அன்புடன் புரிந்து வந்தார்.

முன்னர் பணியாளனுக இருந்த ஒருவர் பின்னர் சிவ னடியா ராயினர்.

அடியவர்களின் முன்னை நிலை குறித்து எண்ணி அவ மதிக்கக் கூடாது.

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே."

என்ற அப்பர் அமுத வாக்கின்படி, முன்னர் எத்துணைய ராகி, எத்தொழில் புரிந்தன ராயினும் அடியவரானல் அவர் களை முன்னை நிலை கருதாது வழிபட வேண்டும்.

இத் திருநெறியினின்றும் வழுவி, பாதம் விளக்க நீர் வார்க்க மறுத்த மனைவியாரது கரத்தை வெட்டினார். அங்ஙனம் புரிந்ததனால் மனைவியாருடைய பாவம் அப் பிறப்புடன் கழிந்தது. மறுபிறப்பில் தொடராது. ஆதலால் அவர் மீது வைத்த கருணையால் புரிந்தனர் என்க.

வெறித்தண் கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்.

கலிய நாயனார் புராணம்

கலியன்........................அடியார்க்கும் அடியேன்

ஓங்கிய புகழுடைய தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குகின்ற திருத்தலம் **திருவொற்றியூர்.** காருலவு சோலையும் தேருலவு வீதியும் உடைய அப்பதி கடற்கரையில் விளங்குவது. செந்தமிழ்ப் பதிகம் ஒழியாது பாடும் மண்டபங்களும், பெண்மணிகளுடைய நடனங்கள் ஒழியாது நிகழும் அழகிய அரங்குகளும், பல வாத்தியங்கள் ஒலிக்கும் விழா ஒழியாத தெருக்களும், அன்னதானம் ஒழியாது புரியும் திருமடங்களும், தாழை புன்னை சண்பகம் முதலிய மலர் நிறைந்த மரங்களும் நிறைந்து அழகு புரிந்தன.

இத்தகைய அத் திருத்தலத்திலே எண்ணெய் வாணிகம் புரியும் வணிகர்கள் வாழும் சக்கரப்பாடித் தெருவிலே, அக் குலஞ்செய்த புண்ணியத்தால் அவதரித்தார் **கலியநாயனார்.** அவர் மிகுந்த செல்வம் படைத்தவர். திருவருள் நெறியில் நின்ற அவர் சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டு புரிய முயல்வார். தொண்டுகளில் சிறந்தது திருவிளக்கிடுதல் என்று கருதி, திருவொற்றியூரில் திகழும் படம்பக்க நாதருடைய திருக்கோயிலில் உள்ளும் புறமும் ஆயிரக் கணக்கான விளக்குகள் இரவும் பகலும் ஏற்றி மகிழ்ந்தார்.

எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித் தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றியூர் அமர்ந்த
கொல்லைமழ விடையார்தம் கோயிலின் உள்ளும் புறமும்
அல்லுநெடும் பகலும் இடும் திருவிளக்கின் அணிவிளைத்தார்.

வறுமையிலும் திருத்தொண்டு புரியும் அவர் பெருமையை உலகிற்கு உணர்த்தும் உமைபங்கன் திருவருளால், செல்வத்தை வளர்க்கும் வியாபாரம் நின்றுவிட்டது. அவருடைய இருவினை மாண்டதுபோல் செல்வமும் அழிந்து விட்டது.

திருத்தொண்டில் நிலைபெற்ற அன்புடைய கலியநாயனர், தமது குலத்தார்களிடம் எண்ணெய் வாங்கி ஆங்காங்கு சென்று விற்று அதனல் வரும் கூலியைக் கொணர்ந்து விளக்கிடும் தொண்டினைப் புரிந்துவந்தார். சில காலத்திற்குப் பின் இவர் பால் எண்ணெய் தந்து விற்கச் செய்யும் செயலைக் குலத்தினர் விடுத்தபடியால், இவருக்குக் கூலியும் கிடையா தொழிந்தது.

கலியனர் மனந் தளர்ந்து எண்ணெய் ஆட்டியும், பக்குவத்தில் எண்ணெய் இறக்கியும், செக்குமாட்டை ஓட்டியும் அதனல் வரும் கூலியைப் பெற்று விளக்கிட்டு, தமது திருத்தொண்டை விளக்கிட்டார்.

செக்குநிறை எள்ளாட்டி பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எருதுய்த்தும்
தக்கதொழில் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்.

இப்படி செக்குஓட்டும் தொழில்புரிவார் பலர் ஏற்பட்டதனல் இவருக்கு அத் தொழிலும் கிடையா தொழிந்தது. தமது வீட்டையும் வீட்டிலுள்ள பண்டங்களையும் விற்று திருவிளக்கிட்டார். பின்னர் ஒன்றும் இன்மையால் தமது மனைவியாரை விற்க முயற்சி செய்தார். தமது மனைவியாரைப் பெற்றுப் பொன் தருவாரைத் தேடினர். ஒருவரும் கிடைத்தாரில்லை.

படம்பக்கநாதருடைய கோயிலுக்கு வந்தார். அன்று விளக்கிட ஒரு சாதனமும் இன்றி உள்ளந் தளர்ந்தார். "விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை" என்று துணிந்தார். அகல்களை வரிசையாக அமைத்தார். அகல் தோறும் திரியிட்டனர். எண்ணெய்க்குப் பதிலாகத் தமது உதிரத்தையே நிரப்ப எண்ணி வாள் கொண்டு கண்டத்தை யரிந்தார். அவ்வாறு அரிந்த அவர் திருக்கரத்தைச் சிவ மூர்த்தி நேரே வந்து பிடித்தருளினர்.

விடையின்மீது எம்பிரான் காட்சி கொடுத்தருளினர். அரிந்த இடர் அகன்றது. "தேவதேவா! மகாதேவா! என்னை யாளுடைய ஈசனே! மாசிலாமணியே!" என்று அஞ்சலி செய்து துதித்தார். சிவபெருமான் அருளினல் அவருடன் சிவபதம் புகுந்து ஆரா யின்ப அமுதம் அருந்துவாராயினர்.

விளக்கம்

திருவொற்றியூர்:—

தொண்டை நன்னட்டில் கடற்கரையில் பூலோக சிவலோகமாக விளங்குவது திருவொற்றியூர். காவிரிப்பூம் பட்டினத்திலே அவதரித்த பட்டினத்து அடிகளார் முத்திபெற்ற திருத்தலம். சுந்தரமூர்த்தி நாயனர் சங்கிலியாரை மணஞ் செய்து கொண்ட தலம்.

வாவியெலாந் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

ஓடு விழுந்து சீப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யான்கண்டு கொண்டேன்—கடுவருந்து
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியிற் பொடி.

என்று பட்டினத்து சுவாமிகள் இத் தலத்தைச் சிறப்பித்துப் பாடியிருப்பதனால் இதன் பெருமை நனிவிளங்கும்.
சுவாமி பெயர்:— படம்பக்கநாதர்— எழுத்தறியும் பெருமான்.
அம்மை பெயர்:— வடிவுடை மாணிக்கம்.

கலியநாயனார்

இவர் கோயிலில் திருவிளக்கிடும் திருப்பணியை மேற்கொண்டு, அதனை யிடைவிடாது புரிந்துவந்தவர். இரவு பகலாகக் கோயிலில் பற்பல விளக்குகளை யிட்டு மகிழ்ந்தார். வறுமை வந்தும் அப்பணியை விடாது கூலிக்கு எண்ணெய் விற்றும், செக்கு ஓட்டியும் புரிந்தார். இறுதியில் உறுதியுடன் எண்ணெய்க்குப்பதில் ஊட்டியை அரிந்து உதிரத்தையே விடுத்து விளக்கெரித்தார் எனில் அவருடைய திருத்தொண்டின் திறத்தை யாம் இயம்பவல்லேமோ?

அளவற்ற உறுதியுடைய இவரது திருக்கரத்தைக் கண்ணுதலார் பெருகு திருக்கருணையுடன் நேர் வந்து பிடித்தருளும் பேறு பெற்றார்.

திருவிளக்கிடுதல்

திருக்கோயிலில் திருவிளக்கிடுதல் சிறந்த ஒப்பற்ற திருத்தொண்டாகும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்கின்றார் திருநாவுக்கரசனார். அபுத்திபூர்வமாக அணைகின்ற திருவிளக்கைத் தூண்டிய புண்ணியத்தினால் எலி பலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்பதனால் விளக்கிட்டவர் பெறும்பேறு விளக்கப்படுகின்றது.

இத்தகைய நற்பணியில் தலைசிறந்து இறுதிவரை உறுதியுடன் நின்றவர் கலியநாயனார். அவருக்கு இப்பணியில் இருந்த இணையற்ற உறுதியை அடியில் வரும் திருப்பாடலினால் அறிக.

மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமையெங்குங் கிடையாமல் தளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவிலுமுன் பறியாதார் கையறவால் எய்தினர்.

உ

முருகா

கற்பு

பெரியநாயகி

(உகள-ம் பக்கத்தொடர்ச்சி)

பொழுது புலர்ந்தது. அன்னபூரணி எழுந்தாள். படுக்கையில் தன் அருமந்த குழந்தையைக் காணாது திடுக்கிட்டாள். வீட்டிலும் தோட்டத்திலும் வெளியிலும் தேடினாள். அவள் மனம் பதறியது. ஒன்றும் விளங்காது அழுதாள். அரண்மனைக்கு வெளியிலும் தேடச் செய்தாள். அரண்மனை முழுவதும் ஒரே குழப்பம். குழந்தை பெரியநாயகி காணப்படவில்லை. மன்னன் சுதர்மனிடம் ஓடி ஒரு தூதன் கூறினான். மன்னன் விரைந்துவந்து "பெண்ணே! குழந்தை எங்கே?" என்று கேட்டான். "இரவு என் அருகில் படுத்திருந்தது. விடிந்ததும் காணப்படவில்லை. பெரிய மாயமாக இருக்கின்றது. நாலா பக்கங்களிலும் தேடச்செய்யுங்கள். என் மாணிக்கத்தைக் கண்டால் ஒழிய நான் வாழமாட்டேன்" என்று கூறியழுதாள்.

அந்த சமயத்தில் மூத்த மனைவி மாதங்கிவந்து, "ஐயோ! என்குலக் கொழுந்து எங்கே? இப்படியும் அஜாக்ரதையாக இருக்கலாமா? இது என்ன கண்கட்டு வித்தையாக இருக்கின்றதே. அரண்மனையில் படுத்திருந்த குழந்தை எப்படி காணமற் போகும்? அரண்மனைக் காவல் நன்றாக இருக்கின்றது; என் செல்வமே! உன்னைக் கண்டால் கலி தீருமே! தொட்டால் துயர் தீருமே? எந்தப்பாவிகளோ நகைக்கு ஆசைப்பட்டுக் களவு செய்துவிட்டார்கள் என நினைக்கின்றேன். ஐயோ! என்னைக் கேட்டிருந்தால் அந்த நகையை விட இரட்டிப்பாகத் தருவேனே? என் மனம் பதறுகின்றதே. தலை சுற்றுகின்றதே. என் இராஜரத்தினத்தை யபகரித்த பாவிகளுக்கு நற்கதி வருமா? அவர்கள் கைக்குக் குஷ்டரோகந்தான் வரும். என் பிராணபதி! இப்படி நீங்கள் மெத்தனமாக இருக்கக்கூடாது. உங்கள் அங்கம் பதறவில்லையா? ஆயிரம் பேரை அநுப்பி எங்கெங்கும் தேடச் செய்யுங்கள்" என்று கூறிக் கதறியழுதாள்.

அவள் அழுகையைக் கண்டு அரண்மனையில் உள்ள அனைவரும் அழுதார்கள். உண்மையான அழுகை என்றே அரசனும் அன்னபூரணியும் நம்பினார்கள். அவள் தான் கொலை செய்தவள் என்று அவர்களால் எப்படி அறிய முடியும்?

சுதர்மன் தன் பரிசனங்களை யனுப்பி ஊரெங்கும் தேடச் செய்தனன். எங்கு தேடியும் குழந்தை கிடைத்த பாடில்லை. மன்னன் மட்டற்ற துயரமுற்றான். அன்னபூரணி விம்மி விம்மி

யழுதாள். அரண்மனை மட்டுமன்றி அந்நகரமே துன்பக்கடலில் முழுகியது.

அன்னபூரணி அன்னமும் உறக்கமும் இன்றிப் பெருந் துயரமுற்ருள். அவள் மனம் தண்ணீராய் உருகியது. அழுது அழுது முகம் சிவந்துவிட்டது. அவளை யாராலும் தேற்ற முடியவில்லை.

காட்டிலே அக்கொலைஞன் பெரியநாயகியைக் கொல்ல முயன்றபோது பாணம் வந்து தைக்க அக்கொலைஞன் மாண்டான் என்று முன்னே கண்டோமல்லவா?

அக் கொலைஞன் குழந்தையைக் கொல்ல முயன்ற தருணத்தில் அங்கு வேட்டையாடிவந்த வேடன் ஒருவன் தெய்வச் செயலாக அங்கு வந்தான். அவன் தான் திடீர் என்று பாணம் போட்டான். அக்கணைபட்டு கொலைஞன் மாண்டான். வேடன் ஓடிவந்து, "அம்மா! அம்மா!' என்று அழுகின்ற குழந்தையை எடுத்து அணைத்து, தன் குடிசைக்குச் சென்ருன். அவன் மனைவியிடம் குழந்தையை ஒப்படைத்தான். வேட்டுவன் மனைவி தன் குழந்தைபோல் அணைத்து ஆறுதல் புரிந்தாள்.

மிகவும் அருமையுடன் குழந்தை வளர்ந்தது. வேடனும் வேடுவச்சியும் அளவற்ற அன்புடன் அன்னபூரணியை வளர்த்தபடியால், பெரிய நாயகி தாய்தந்தையரை மறந்து மகிழ்ச்சியாக விளையாடினுள். அவளுடன் மான்குட்டிகளும், பசுவின் கன்றுகளும் விளையாடும்.

பெரியநாயகி அழகு ஒழுக நடந்தாள். அவள் திருமுகம் முழுமதியைப் போல் குளிர்ந்து விளங்கியது.

ஒரு நாள் அவள் அக்குடிசைக்கு அருகில் உள்ள பூச்செடிகளில் மலர் பறித்துக் கொண்டிருந்தாள். அங்கு ஒரு கரும் பாந்தள் தீண்டியது. அங்ஙனமே மயங்கி விழுந்தாள். விஷவேகம் தலைக்கேறியது. வேட்டுவன் மனைவி குடிசையைவிட்டு வெளியே வந்தாள். ஆங்கு பிணம்போலக் கிடந்த மகளைப் பார்த்துப் பதறினுள். ஓ என்று கதறினுள். வேட்டைக்குப் போயிருந்த வேடனும் வந்து, தன் வளர்ப்புப் பெண்ணின் நிலையைக் குறித்து வருந்தினுன்.

அங்கு தெய்வத் திருவருளால் ஒரு முனிவர் பெருமான் வந்தனர். அவர் அப்பெண்மணியின் ஆபத்தைக் கண்டார். வேடுவனையும் அவன் மனைவியையும் பார்த்து, "அஞ்சற்க" என்ருர். பெரியநாயகியின் சிரத்தில் தமது கரமலரை வைத்து கருடமந்திரங் கூறினுர். சில விநாடிக்குள் அவள் கண் விழித்துப் பார்த்தாள். உணர்வு பெற்று எழுந்தாள். முனிவருடைய

திருவடியில் வீழ்ந்து வணங்கினாள். முனிவர் அவளுடைய பணிவையும் பக்தியையுங் கண்டு அகமகிழ்ந்தார்.

சிலநாள் அங்கு தங்கி அவளுக்குக் கல்வி யறிவையும் இசை ஞானத்தையும் வழங்கி யருள்புரிந்தார். பெரியநாயகி அறிவிலும் பாடலிலும் நனி சிறந்து விளங்கினாள். மங்கைப் பருவம் அடைந்தாள். தான் அரசகுமாரி யென்பதையும் முனிவரால் அறிந்தாள்.

வேடனை நோக்கி, "அப்பா! நான் உண்மையாக உங்கள் பெண்தானா? என்னைப் பற்றித் தெரிந்ததை எனக்குச் சொல்லலாமா?" என்று விநயமாகக் கேட்டாள்.

வேடன், "அம்மா! ஒரு அரச குமாரியாகவே உன்னைக் கருதுகின்றேன். ஒரு நாள் உன்னை ஒரு கொலைஞன் கொல்ல முயல்கின்றபோது, வேட்டையாடிக் கொண்டிருந்த நான் அக் கொலைஞனைக் கொன்று உன்னைக் காப்பாற்றினேன்" என்றான்.

அரச குமாரியாகிய தான் காட்டிலே வேடனுடைய குடிசையிலே எளிமையாக வளருமாறு செய்ததன் ஊழை நினைந்து வருந்தினாள். தன்னைப் பெற்றாரை யறியவும் அவர்களைக் காணவும் அவள் உள்ளம் விரும்பியது.

ஒருநாள் பெரியநாயகி அக்காட்டில் உள்ள பூ மரங்களையும், ஆடுகின்ற மயில்களையும், குதித்து ஓடுகின்ற மான்களையும், இறைவனுடைய கருணை வெள்ளம் போல் விழுகின்ற அருவிகளையும் கண்டு களித்து உலாவிக் கொண்டிருந்தாள்.

வேட்டையாடிக் கொண்டுவந்த பிங்கலபுரத்து மன்னனுடைய குமாரன் **சுதந்திரன்** அங்கு தற்செயலாக வந்தான். நல்ல இளைஞன். சிவபெருமான் நெற்றிக் கண்ணினால் எரிந்த மன்மதன் தவம்புரிந்து உருவம் பெற்று வந்ததுபோல் அவன் விளங்கினான். இருபத்தைந்துவயதுக்கு மேற்படாத அக்கட்டழகன் சுவர்னச் சிலைபோல் இலகினான். அக்குமாரன் வில்லைத் தாங்கி அரச சிங்கம்போல் நின்றான். அவன் இரதி தேவிபோல் அங்கு உலாவுகின்ற பெரியநாயகியைக்கண்டான். கண்டஅவன் திடுக்கிட்டுப் போனான். அவன் கண் இமைக்குந் தொழிலை மறந்தது. வனதேவதையோ என்று ஐயுற்று நின்றான். கண் கொள்ளாத கவினுடைய இவள் அரமடந்தையோ? நரமடந்தையோ? ஆஆ! பெண்மைக்கு உறைவிடமாகிய இப் புண்ணியவதியைக் காண நான் என்ன தவஞ் செய்தேனோ?" என்று எண்ணி அதிசயித்தான். அவன்பால் அணுகினான். "பெண் மணியே! நின் பேர் யாது? உன்னைப் பெற்ற உத்தமர்கள் யாவர்?" என்று வினவினான்.

பெரிய நாயகி நாணமுற்று ஒரு பூத்த கொடியின் அருகில் பொற்கொடி போல் சாய்ந்து நின்று, 'அதோ தெரிகின்ற குடிசையில் வாழ்கின்ற வேட ராஜனுடைய மகள் நான்' என்றாள்.

"பெண்ணரசே! நான் பிங்கலபுரியை யாளுகின்ற மன்னவன் மகன்; சுதந்திரன் என்பது என் பேர். நான் உன்னைக் காதலிக்கின்றேன். நீ என்னை ...." என்றான்.

பெரியநாயகி, "அரசே! வணக்கம். என் தந்தையாரைக் கேட்டு, அவர் இசைந்தால் உமது எண்ணம் நிறைவேறும்" என்றாள்.

சுதந்திரன் கட்டுப்பட்ட மனமுடையவன். ஆதலால் மேற்கொண்டு அவளிடம் ஒன்றும் பேசவில்லை. நேரே வேடன் வாழ்கின்ற குடிசைக்குச் சென்றான். வேடனைக் கண்டான். அரசகுமாரனைக் கண்ட வேடன் பயபக்தியுடன் எழுந்து அவனை வணங்கினான். ஒரு புலித்தோலைப் போட்டு இருத்தினான். தீர்த்தங் கொணர்ந்து தந்தான்.

"ஐயா! தங்கள் புதல்வியை எனக்கு மணஞ் செய்துத் தர வேண்டும்" என்றான் சுதந்திரன்.

வேடன், "ஐயனே! வணக்கம். தாங்களோ அரச குமாரர். நானோ வேடன். என்னை ஒரு பொருளாக மதித்து, என்மகளை விரும்புவீரானால் அது நான் செய்த பாக்கியமே. ஆயினும் தங்கள் பிதாவும் வந்து என்னைப் பெண் கேட்கவேண்டும். அது தானே முறை" என்றான்.

சுதந்திரன் அம்மொழிக்கு மறுமொழி புகல முடியவில்லை. நல்லது என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். அவன் உள்ளம் புறப்படவில்லை. தான்கண்ட அம்மடவரலிடமே அவனுடைய உள்ளம் நின்றுவிட்டது. தனது நகரஞ் சேர்ந்தான். ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவன் போல் பரதவித்தான். தன் மனோநிலையைக்கூற அஞ்சினான்; நாணஞ் செய்தான். தனது உயிர்த்தோழன்மூலம் மெல்லத் தன்கருத்தைப் பிதாவிடம் அறிவித்தான். அவ்வசனத்தைக் கேட்ட மன்னன் மருண்டான். மகனையழைத்து உரைப்பான்.

"சுதந்திரா! நீ எண்ணுவது அதர்மம். நம்முடைய அரசகுலத்துப் பெண்மணியை நீ விரும்புவது முறையாகும். வேடர்குலப் பெண்ணை மணப்பது முறையாகாது. மன்னர் குலத்துக்கே மாசுண்டாகும். ஆனை பூனையுடன் உறவு செய்வது போலாகும். இது தீராத வசையுமாகும். வேண்டாம். இந்த எண்ணத்தை விட்டுவிடு" என்றான்.

சுதந்திரன் நாணமும் அச்சமும் ஒருங்கே யுடையவனாய் பிதாவைப் பணிந்து, "தந்தையே! நான் வனத்திலே கண்ட பெண் தெய்வமகள் போன்றவள். சேற்றிலே செங்கழுநீர் முளைத்ததுபோல் அவள் அக்குலத்திலே தோன்றியுளாள். இரத்தினமணி எங்கிருந்தாலென்ன? பத்தினிகட்கும், பத்தர் கட்கும், ஞானிகட்கும் பிறப்பினால் உயர்வு தாழ்வு இடையாது. வள்ளியம்மை வேடர் மகள் அல்லவா? ஆகவே தாங்கள் கருணைகூர்ந்து அவளை எனக்கு மணஞ்செய்து வைத்து அருள் புரியுங்கள். இல்லையேல் என் உயிர் வாழ்க்கை இல்லையாக முடியும்" என்றான்.

மன்னன் என் செய்வான்? ஒரே பிள்ளை. மகன் ஒருவேளை மாண்டொழிந்தால் என் செய்வது? என்று ஏங்கினான்.

தன் மகன் தன்னை யநுசரிக்காமலேயே அவளை மணந்து கொண்டால் அது இன்னும் அபகீர்த்தியாகும் என்று கருதி. மகன் மனம்போல் மணம்புரிந்து வைப்பதாக இசைந்தான். தனக்கு முழுவதும் உடன்பாடில்லையானாலும், மகனுடைய விருப்பத்திற்காக இசைந்தான்.

நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டு மகன் கூறிய அடையாளப்படி அவ்வனஞ் சேர்ந்தான். அவ்வேடனை யடைந்தான். வேடன் ஓடிவந்து வேந்தனை வரவேற்று பழமும் சுவை மிக்க தண்ணீரையும் தந்து உபசரித்தான்.

மன்னன், "ஐயா! தங்கள் புதல்வியை என் புதல்வன் விரும்புவதால் உமது புதல்வியை எனக்கு மருமகளாகத் தர வேணுமாய் விழைகின்றேன்" என்றான்.

வேடன், "வேந்தரேறே! எங்கள் வேடர்குலம் மிகவும் வீறு பெற்றது. முருகப் பெருமானுக்குப் பெண் கொடுத்து முருகனை மருகனாகக் கொண்டது எங்கள் குலம். அன்றியும், சிவமூர்த்தி வேட வடிவும் உமையம்மை வேடுவச்சி வடிவும் கொண்டு ஒரு வேந்தனாகிய விஜயனுக்கு அநுக்கிரகம் புரிந் தார்கள் என்றால், வேந்தர் குலத்தினும் விழுமியது வேடர் குலம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலே முன்தோன்றி வாளுடன் மூத்தகுடி எங்கள் வீரக்குடி. எங்கள் தூயகுலத்திலே சூதுவாதுகள் அணுவளவும்கிடையா. உடன்பிறந்தார்களுடன் சூதாடிக் கானகத்திற்கு ஓட்டிய துரியோதனனும், மருமகனைக் கொல்லுதற்கு முயன்ற கம்சனும் மன்னர் குலமல்லவோ? இத்தகைய கொடுமைகள் எங்கள் குலத்தில் நிகழ்ந்ததே யில்லை. முடியுடைய பெருவாழ்விலும், வீரம் நிறைந்த திருவாழ்வே சிறப்புடையது. ஆகவே என் மகளைத் தருவதற்கு நான் இசையேன்" என்றான்.

மன்னவன் கேட்டு வெட்கினான். தனது அரசகுலம் உயர்ந்ததென்றும், வேடர்குலம் தாழ்ந்ததென்றும் எண்ணியிருந்தானாதலின், வேடன் உரை அவனைத் திடுக்கிடச் செய்தது. வேடன், மன்னர் குலத்தைத் தாழ்த்தியும், வேடர் குலத்தை உயர்த்தியும் கூறிய சொல் அவன் உள்ளத்தைச் சுட்டுவிட்டது. சற்று நிதான புத்தியுடன் சிந்தித்தான். ஆண்டவன் படைத்த மனித சமுதாயத்திலே எல்லோருமே சிறந்தவர்கள் தானே. ஒவ்வொருவரும் தத்தம் குலத்தை உயர்ந்ததென்று கருதுவது முறை தானே. ஆகவே நாம் கோவிப்பது நியாயமன்று என்று கருதினான்.

அந்த வேளையில் அங்கே முனிவர் பெருமான் வந்தார். மன்னன் எழுந்து அவரை வணங்கினான். வேடனும் பெரியநாயகியும் பணிந்தார்கள். முனிவர் மன்னனை நோக்கி, "என்ன காரியமாக வந்தனை?" என்று கேட்டார். மன்னன், வேடராஜன் மகளைத் தன் மகனுக்கு மணம் பேச வந்ததையும், அவன் உடன்படாததையும் உரைத்தான்.

முனிவர்வேடனைநோக்கி, "அப்பனே! மன்னர்மரபு தாழ்ந்ததன்று; நளனும்அரிச்சந்திரனும், யயாதியும், திலீபனும், பகீரதனும், மாந்தாதாவும் மன்னர் குலமல்லவா? பன்னரும் பெருமையுடையவர்கள் மன்னவர்கள். அன்றியும் உன் புதல்வியாகிய பெரியநாயகி தகடூரையாளும் சுதர்மனுடைய புதல்வி; மன்னன் மகள் மன்னனை மணப்பது முறையேயாகும். அரவந் தீண்டி மாளும் தருவாயில் நான் அவளை என் தவ வலிமையால் காப்பாற்றினேன். அன்றியும் அவளுக்குக் கல்வி புகட்டினேன். ஆகவே என் மானவியாகிய பெரியநாயகியை என் உரைப்படி இம் மன்னன் மகனுக்கு மணஞ் செய்து தருவாயாக" என்றார்.

தனது பிறப்பைப் பற்றியும் தான் தகடூரையாளும் சுதர்மனுடைய மகள் என்ற விவரத்தையும் முனிவர் மூலம் அறிந்த பெரியநாயகி மகிழ்ச்சியுற்றாள். தகடூர் மன்னனுடைய மகள் தனக்கு மருமகளாக வருவது மிகவும் சிறப்புடையதே என்று கருதி பிங்கல மன்னன் பெருமகிழ்ச்சியடைந்தான். வேடனும் வியந்தான்.

தன் மகளையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு மன்னனுடன் புறப்பட்டான். பெரியநாயகியின் வேண்டுகோளுக்கு இணங்கி முனிவரும் புறப்பட்டார். எல்லோரும் பிங்கலபுரியைச் சேர்ந்தார்கள். திருமணவோலை அரசர்கள் அனைவருக்கும் பிற நண்பர்கட்கும் சென்றது.

தகடூருக்கும் அவ்வோலை வந்தது.

உ

சிவமயம்

திருமண அழைப்பு

எல்லாம் வல்ல இறைவனுடைய இனிய கருணையால் நிகழும் ஆனந்த வருடம், ஆனிமாதம், 6-ம் நாள், காலை,

தகடூர் மன்னர் திரு. சுதர்மருடைய புதல்வி திருவளர் செல்வி **பெரியநாயகியை**	என்புதல்வன் திருவளர் செல்வன் **சுதந்திரன்**

வாழ்க்கைத் துணைவியாக மணக்கின்றபடியால் தாங்கள் தமருடன் வந்து வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
ராஜேந்திரன்
மங்கலபுரி

இந்தத் திருமணவோலை தகடூர் மன்னன் சுதர்மன் படித்துத் திடுக்கிட்டான். தனது குழந்தை பெரியநாயகிக்குத் திருமணம் என்ற பதத்தைக் கண்டவுடன் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை, தன் மனைவியிடம் ஓடி ஓலையைக் காட்டினான். திருவருளின் விநோதத்தை யாராலே யறிய முடியும்? என்று கருதி மகிழ்ந்தான். மூத்த மனைவியாகிய மாதங்கி தொழுநோயினால் துன்புற்றுத் துடிக்கின்றபடியால் அவளை விடுத்து, அன்னபூரணியுடனும் சதுரங்க சேனையுடனும் பிங்கலபுரியை யடைந்தான்.

பிங்கலபுரி வேந்தன் இராஜேந்திரனுடைய அரண்மனை புகுந்தான். தன் புதல்வி பெரியநாயகியைக் கண்டான். இளங் குழந்தையாக இருந்த அவள் இப்போது நல்ல யுவதியாகத் திகழ்கின்றாள். தாய் தந்தையர் மலரடி மீது வீழ்ந்தாள். மகளை எடுத்து அணைத்தும் தாயும் தந்தையும் கண்ணீரால் அவளை அபிஷேகம் புரிந்தார்கள். அவர்களுக்கு உண்டான உவகையை உரைக்க வல்லார் யாவர்?

வேடனைத் தழுவி, தன் மகளை யாதரித்து வளர்த்தமைக்கு நன்றிகூறி உபசரித்தார்கள். குறித்த காலத்தில் சுதந்திரனுக்கும், பெரியநாயகிக்கும் திருமணம் நிகழ்ந்தது. மன்னர்கள் வாழ்த்தினார்கள். பெரியநாயகி சுதந்திரனுடன் இன்புற்று வாழ்ந்தாள்.

உ

முருகா

நாகை வித்துவான் சதாசிவம் பிள்ளை

திரு. S. இராமச்சந்திரப் பத்தர், B. A., (சப்மாஜிஸ்டிரேட்) தஞ்சை.

தமிழ் நாட்டில் அண்மையில் தோன்றிய தமிழ்ப் பெரும் புலவர்களில் நாகை வித்துவான் சதாசிவம் பிள்ளை யவர்கள் ஒருவராவர். இவர் தஞ்சைக்குக் கீழ்பாலுள்ள பூண்டி என்னும் சிற்றூரில் விஞ்சைராயர் குடியில் தோன்றினர். சென்ற நூற்றாண்டின் இறுதியில் கும்பகோணத்தில் தமிழ்ப் புலவராக வாழ்ந்தவரும் 'குடந்தை வெண்பாமாலை' என்னும் நூலின் ஆசிரியருமாகிய யாழ்ப்பாணம் முருகேச பண்டிதரிடம் இவர் இளமை தொட்டே முறையாகத் தமிழ் பயின்றார். பின்னர் திருவாவடுதுறை மடத்தை யடுத்து அதுபோது அங்கு மடத்து அதிபதியாகவும் தமிழ் மொழி வடமொழிப் புலமையில் சிறந்தவராகவும் விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் பயின்றார். அக்காலத்தில் இவருடன் அம்மடத்தில் கல்வி பயின்ற மாணவர்களுள் பழநிக்குமாரு தம்பிரான் ஒருவராவர்.

முதலில் நாகைப்பட்டினத்தில் நடுத்தரப் பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகத் தொண்டாற்றினர். பின்னர் அவ்வூர் தேசிய உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் தொண்டாற்றினர். பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரை தேவரவர்களின் அரும் பெரும் முயற்சியால் மதுரை நகரில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவியபொழுது சதாசிவம் பிள்ளை யவர்கள் அச் சங்கத்தின் உறுப்பினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழுக்குத் தொண்டு புரியும் நோக்கத்துடன் 'நீலலோசனி' என்ற உயரிய வார வெளியீடாகத் தமிழ்த்தாள் ஒன்றை இவர் நாகையில் நடத்தி வந்தார். அத் தாள் யாவராலும் போற்றிப் பாராட்டப் பட்டது. மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' முதலிய சிறந்த தமிழ் வெளியீடுகளில் இலக்கியம் இலக்கணம் சமயம் பற்றிய பலவகைக் கட்டுரைகளை இவர் எழுதி வந்தார். இராமநாதபுரம் மன்னர் அவர்களால் அன்னார் அவைக்களப் புலவராக இவர் பெரிதும் போற்றப்பெற்று விளங்கினர். தென்னாட்டிலுள்ள மடத்து அதிபர்கள் பலரும் இவரைப் போற்றி வந்தனர். இவர் தம் புலமையைப் பயன்படுத்திக் கொள்ளாத கழகங்களோ, சங்கங்களோ, சபைகளோ அக்காலத்தில் இல்லை என்னலாம். பல ஆண்டு விழாக்களில் இவர் தலைமை தாங்கி அக் கூட்டங்களைச் சிறப்புற நடத்தித் தந்துள்ளார்.

இவர் சிறந்த தமிழ்ப் புலமைப் பெற்றிருந்ததோடு செம் பாகமாகக் கவி பாடும் ஆற்றலுடையவராகவும் விளங்கினர். 'தமிழ்த்தாய் தம் மக்களுக்கு அறிவுறுத்தல்', 'பெண் கல்விக் கும்மி' 'புலிக் கண்ணி' 'மறலிவிடு தூது' முதலிய செய்யுள் நூல்கள் இவர் இயற்றியவற்றுள் சில. அவ்வக் காலங்களில் இவர் பாடிய தனிப் பாடல்கள் எண்ணில. அவற்றுள் சில சேற்றூர் சமீன் அவைக்களப் புலவராக விளங்கிய மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களால் தொகுத்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ள 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்னும் அரிய தொகை நூலில் வெளிவந்துள்ளன. இவர் இயற்றிய செய்யுட்கள் யாவும் சொல் நயம், பொருள் நயம் செறிந்தும், ஓசை நயம் வாய்ந்தும், எதுகை மோனைகள் பாடும் போக்கிலேயே எளிதில் அமைந்தும் உள்ளன. சமயத்திற் கேற்ப நகைச்சுவை பெருகப் பேசும் திறமையிலும் இவர் சிறந்து விளங்கினர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் விரிவுரை செய்யும் ஆற்றலும் படைத் திருந்தார். இவர் வரைந்த கட்டுரைகள், ஆற்றிய சொற் பொழிவுகள் யாவும் புதுப் புதுக் கருத்துக்களைத் தோற்று வித்துக் கருத்தினை விரிவு படுத்தும் பண்புடையன.

இவர் 1934ம் ஆண்டில் திருவாவடுதுறை மடத்து அதிபரிடம் துறவு நிலை பெற்று அவ்வாண்டிலேயே தம் முது மைப் பருவத்தில் புகழ் உடம்பை எய்தினர். இவ்வுலகை விட்டுப் பிரிவதற்கு ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தமது அந்திய காலம் நெருங்குவதை யுணர்ந்த இவர் தம்மை அன்புடன் நேசித்த நண்பர்களிடமிருந்து விடைபெறு முகத்தால் பின்வரும் பாக்களை இயற்றினர். தமிழின்பால் இவர் கொண்டிருந்த தனிப் பேரார்வமும், சிறந்தவை என இவர் மதித்திருந்த தமிழ் நூல்களின் பெயர்களும் இப்பாக்களில் காணப் படுகின்றன. மேலும் இப்பாக்கள் மூலம் இவருடன் நெருங்கிப் பழகிய அன்பர்கள், புலவர்கள், புரவலர்கள், சமயத் தலைவர்கள் யார் யார் என்றும் அறியலாம்.

ஆங்கில மொழியில் 'எலிஜி' (Elegy) என்ற கையறு நிலை இலக்கிய வகை ஒன்று உண்டு. இறந்தோரைப் பற்றிய இரங்கற் பாக்களே அவ்வகை நூல்கள். மிலிட்டன் இயற்றிய லிசிடஸ், ஷெல்லி இயற்றிய அடோனிஸ், மாத்யு ஆர்னல்ட் இயற்றிய திர்சிஸ், லார்டு டென்னிசன் இயற்றிய இன் மெமோரியம், தாமஸ்கிரே இயற்றிய கிராமக் கல்லறையில் எழுதிய எலிஜி முதலியவை ஆங்கில மொழியிலுள்ள சிறந்த கையறு நிலை நூல்களில் சில. தமிழ் மொழியிலும் வட மொழியிலும் மேற்கூறிய ஆங்கில நூல்கள் போன்ற சிறந்த இலக்கியமாகத் தனித்த கையறு நிலை நூல்கள் இல்லை. சில நூல்களின் ஊடே கையறு நிலை பற்றிய பகுதிகள் ஆங்காங்கு விரவி இருப்பதை மட்டும் காணலாம். தமிழ் மொழியிலும் மற்றும் ஏனைய

மொழிகளிலும் வேறு புலவர்களால் இது வரையில் ஆக்கப் பெறாத முறையில் சதாசிவம் பிள்ளை அவர்களின் கையறு நிலை நூல் அமைந்திருப்பதைக் காணலாம். 'இருந் தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்னும் 'தமிழ் விடு தூதின்' அடியை இப் பாக்கள் நினைவூட்டுகின்றன. தமிழ்த் தாய்க்குப் புலவர்கள் அவ்வப்போது அணிவிக்கும் அரும் பணிகளில் இந் நூலும் ஒன்றாகும்.

நூல்

இருந்தேன் எழுப தாண்டாக ஈங்கு நின்றும் ஆங்கேகப்
பொருந்து காலம் பொருந்துவதைப் புலவர்க் கெல்லாம்
[புகல்கின்றேன்
அருந்து கம்பர் சேக்கிழார் அளித்த அமுதம் ஆங்கில்லை!
திருந்து தொல்காப் பியமில்லை! செய்வ தங்குப் போயென்னே! 1

தேவர் குறளும் ஆங்கில்லை! திருவாசகமும் ஆங்கில்லை!
மூவர் முறையும் ஆங்கில்லை! மூலர் மொழியும் ஆங்கில்லை!
கோவை நாலும் ஆங்கில்லை! குலவுஞ் சங்க நூலில்லை!
பாவாம் திருவாய் மொழியில்லை! பரலோகத்துப் போயென்னே! 2

ஆல வாயான் ஆடலெல்லாம் அறையு நூல்கள் அங்கில்லை!
பாலின் இனிய கல்லாடப் பனுவல் தானும் அங்கில்லை!
ஏலுந் தொல்காப் பியப்பனுவற் கியைந்த நால்வர் உரையில்லை!
சாலப் பரிமே லழகருரை தானங் கில்லை! சார்ந்தென்னே! 3

சிந்தா மணிநூல் ஆதியாய்ச் செப்பும் நூல்கள் அங்கில்லை!
நந்தாச் சைவ சிந்தாந்தம் நவிலும் நூல்கள் அங்கில்லை!
கொந்தார் கடம்பன் விளையாட்டைக் கூறும் புராணம் அங்கில்லை!
பைந்தார் தமிழே இல்லாத பரலோ கத்துப் போயென்னே! 4

இயம்பும் நூல்கள் இலையெனினும் இவற்றை எல்லாம்
[உண்டு வைத்து
வயங்கும் புலவர் அவண் முன்போய் மகிழ்ந்து வாசம் செய்கின்றார்
நயங்கொள் அவரை ஆதரித்த நல்லோர் அங்கு வாழ்கின்றார்
மயங்கல் சிறிதும் இல்லாமல் வழிக்கொண் டேகல் மதிதானே. 5

குருமணிசுப் பிரமணிய குணமணியார் அங்கேயுங் கொலுவிருப்பார்
அருமணியா கியபழநிக் குமாரமுனி அடிவருடி அன்பு செய்வார்
திருமணியா கியபனைசைச் சொக்கலிங்க மாமுனிவர் சிலேடை
[சொல்வார்
ஒருமணியா கியசிவனுர் உறைகின்ற பதிக்கேகல் உசித மாமே. 6

ஐயம் தொடர்ந்து விழிசெருகி அறிவு கலங்கி என்னுவி
மெய்யிற் கிடந்து தவிக்காமல் விமலன் அடியில் விரைந்தேகப்
பொய்தீர் ஒழுக்கப் புலவீர்கள் புனித ஆசி புகலுவணம்
கையால் தொழுதேன் நும்மடியைக் கருணை செய்து வாழ்வீரே. 7

இவரிடம் பயின்ற பல மாணவர்களும், நெருங்கிப் பழகிய பல நண்பர்களும் உயரிய பதவிகளிலும் சிறந்த செல்வ நிலையிலும் இருக்கின்றனர். எனினும் இதுகாறும் இப் புலவர் பெருமானுக்கு யாதொரு நினைவுச் சின்னமும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவில்லை. இப் புலவர் தம் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்த நாகைப் பட்டினத்தில் இவர் பெயரால் ஒரு பொது நூல் நிலையம் ஏற்படுத்தலாம். பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதற்கான வசதிகள் வாய்க்கப்பெற்ற பேரவை ஒன்றை இவர் பெயரால் நிறுவலாம். அந் நகரிலுள்ள பள்ளி மாணவர்களிடையே ஆண்டுதோறும் இவர் பெயரால் கட்டுரைப் போட்டி, செய்யுள் இயற்றும் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவை நடத்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் தக்க பரிசில்கள் வழங்கலாம். தமிழ்த் தொண்டர்களும் செல்வ வந்தர்களும் ஆவன செய்வார்களாக.

அறமொழிகள்

(அன்பன் மு. பெருமாள்)

61. இறைவழிபாட்டில் இடையறாது ஈடுபடும்பழக்கத்தை மேற்கொண்டால், இல்லற வாழ்க்கையை இன்பகரமாகவும், இணக்கமாகவும் ஆக்கிக் கொள்ளலாம்.

62. பணத்தாலும், போகத்தாலும், பட்டு அணிகலன்களாலும், பங்களா வாசத்தாலும் ஏற்படும் வாழ்க்கை யின்பம் நீடித்து நிற்பதில்லை. காரணம் அவைகளால் வரும் இன்பம், நாள் அல்லது மணிக்கணக்கில் அனுபவித்து பழமையாகி விடுகின்றன.

63. புதுமையான யின்பங்கள் வந்து கொண்டே யிருந்தால்தான் வாழ்க்கை ருசிக்கும். பக்தியால் பணியப் பணிய இறைவழிபாட்டில் புதுமையான இன்ப அனுபவங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

64. நீடித்த யின்பத்தைத்தான் மனித சுபாவம் விரும்பும். நீடித்த யின்பத்தைத் தாவல்லது இறைவழிபாட்டைத் தவிர வேறு ஒன்றுமில்லை. எனவே இல்லற வாழ்க்கையில் இன்பம் நீடித்திருக்க வேண்டுமாயின் இறைவழிபாட்டை மேற்கொள்க.

333

உ
முருகா

செவியுணவும், அவியுணவும்

(M. S. தனம், தமிழ்ப் பண்டிதை, மதுரை)

அகிலமும் ஆக்கி அளிக்கும் இறைவன் சராசரங்களனைத்திற்கும் அவ்வவற்றிற் கேற்றவாறு பொருள்களைப் படைத்திருக்கின்றான். மனிதன் உயிர் வாழ்வதற்குக் காற்றும் உணவும் இன்றியமையாதவை. உணவு என்பது பலவகையாகப் பிரிக்கப்படுகிறது. வாய்க்குச் சுவை தந்து வயிறு வளர்க்குமுணவை மனிதன் சுவைத்துச் சுவைத்து இன்புறுகின்றான். ஒருவேளை உணவு தவறினும் உயிர் பறந்துவிடுமோ என்றஞ்சும் மக்கள் பலருளர். ஆயினும் உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, புளிப்பு, இனிப்புஎன்னும்அறுசுவையோடு கூடிய வாயுணவை ஆன்றோர்கள் பொருட்படுத்தவில்லையென்றும், இவற்றிற்கெல்லாம் மேற்பட்ட அமுதச் சுவை பொருந்திய ஒர் உணவு உண்டென்றும் அவர்கள் உணர்ந்திருந்தனர்; உணர்ந்தவாறே அனுபவித்தும் வந்தனர். அவ்வுணவுதான் யாதோவெனின், மனிதன் செவிவழியாக நுகரும் உணவேயாம். இது சொற்சுவை, பொருட் சுவையோடு கூடிய ஒப்பற்ற உணவாகக் கருதப் படுகிறது.

செவியுணவு என்றால் என்ன? உலகம் போற்றும் உத்தமர்கள், கல்வி நலஞ்சான்ற வல்லார்கள், ஆத்மீக சக்தி வாய்ந்த ஆன்மாக்கள், கலைவாணியின் கடாட்சம் பெற்ற இசைவாணர்கள் மக்கள் உய்யும் பொருட்டும், தீநெறி விலக்கி நன்னெறிப்படும் பொருட்டும் கற்றுணர்ந்தோதும் கலைச் சொற்களை-அருள் மொழிகளை-அறவுரைகளை செவிக்குணவாம். கேட்டவளவிலே செவிகளை நிரப்பி, சிந்திக்குமளவிலே அறிவை நிரப்பி ஒளிபெறச் செய்து, அருள் ஞானம் ஈந்து ஆண்டவன்பால் சேர்ப்பிக்கும் அருட்டிறமை வாய்ந்ததே செவியுணவாம். உணவு வகைகள் பலவிருப்பினும், உடலின் நோயை நீக்கி உறுதிபெறச் செய்வது எதுவோ அதையே உணவு என்கின்றோம். உடலின் உரத்தைக் குறைத்து, உயிரை மாய்க்கும் தன்மையுடையன உணவாகாதவாறு போல, அஞ்ஞானத்தைப் புகட்டி அந்தகாரத்திலாழ்த்தும் அறிவிலிகளின் வாய்ப் பேச்சும் போதனையும் செவியுணவாகா. இதுபற்றியே வள்ளுவனார் செவிக்குக் கொடுக்கப்படும் உணவாகிய அறிவை "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்று "கேள்வி" க்குப்பின் "அறிவுடைமை" என்னும் அதிகாரம் அமைத்து அதில் புகுத்தினார். ஆகவே மனிதன் எல்லாவற்றையும் தன் காதி

ஞல் கேட்கக் கூடுமாயினும், தன் செவிக்கு இன்பமூட்டி, அறிவுக்கு விளக்கம் கொடுத்து, ஆன்மாவை வலிவு பெறச் செய்து ஆனந்த சொரூபனுகிய அம்பலவாணனை யடைவதற்கு எவை துணை செய்யுமோ அவற்றிற்கே செவி சாய்க்கவேண்டும். அவையே செவிக்கு உணவாம் உரிமையுடையவை.

உலகில் மக்கள் பற்பல நிலைகளில் மேன்மை யுடையராய் விளங்குகின்றனர். குபேரனுகி இன்பம் துய்ப்பவரும், அறிவுடை மக்களைப் பெற்று ஆனந்தமடைபவரும், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்" என்ற தெய்வ மொழிக்கு இலக்காகிய கற்புடை மனையாளைப் பெற்றுக் களிப்பவரும் என்றிவ்வாருக வையகமே பல திறப்பட்ட மக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இவையாவும் அரிய செல்வங்களே யெனினும், அழியுந் தன்மையுடையன. எனவே இவற்றிற் கெல்லாம் மேலான செல்வம் யாது? அதுவே 'கேடில் விழுச்செல்வமாகிய கல்வி! கல்வி கற்பதனுலும், கசடறக் கற்றவர் வாய்ச் சொல் கேட்பதனுலும், துய்க்கும் செவிச் செல்வம் செல்வத்துளெல்லாம் தலையாயது. பிற செல்வங்கள் வேண்டப்படுவதும், பிற உணவுகள் விரும்பப்படுவதும் செவிச் செல்வம் இல்லாத போதே. எங்ஙனமெனின் நெய், பருப்பு, அப்பளம் முதலிய நல்ல விருந்து கொடுக்க எண்ணி, உணவு வகைகளை வாங்கச் சென்ற ஒருவன் நல்ல மணமுள்ளதும், புதிதும், கலப்புச் சேராததுமாகிய நெய்யையும், நன்ருக வேகக்கூடிய நயம் பருப்பையும், பொள்ளெனப் பொரியக் கூடியதும் பெரியதுமான ஆனைக்கால் அப்பளத்தையும் வாங்க விரும்புகிருன். நெடுநேரம் அலைந்தும் அவை கிடையா என்ற முடிவுக்கு வரும் போதே மட்ட ரகங்களை வாங்குகின்ருன். அவை அவன் நடத்தப்போகும் விருந்துக்குக் களங்கத்தை யுண்டாக்கினுலும் அவனுல் என்ன செய்யமுடியும்? அதனை யொப்ப மட்டரகங்களில் சேர்க்கப்படும் பொருட் செல்வம் முதலியவற்றை அறிஞர் விரும்பார். அவர்களுக்காகக் காத்திருப்பது செவிக் குணவாகிய அமுதச் சொற்களே. இவ்வுணவு முற்றும் இல்லாத போதே அவர்கள் வயிற்றுணவைத் தேடுகின்ருர்கள். இம்மையில் இன்பம் தரும் வயிற்றுக்கு உணவு கொடுக்க வேண்டுமே. பசிக்கிறதே என்ற கவலையை மாற்றி விடும் அற்புதச் சத்தியை நாம் கேள்வியால் பெறுகின்ருேம். உலக இயற்கையோ, யாதானும் ஓர் காரியத்தை ஒருவன் செய்ய மறந்துவிட்டால், அல்லது மாணக்கன் வீட்டுப் பாடம் எழுத மறந்துவிட்டால் ஆசிரியர் அம்மாணுக்கனை வகுப்பில் நிறுத்தி வைத்து "ஏண்டா வீட்டுப் பாடம் கொண்டு வரவில்லை? சாப்பிட உனக்கு மறக்குமா?" என்று கேட்கிருர். வகுப்பறை முழுவதும் 'கொல்' என்று சிரிக்கிறது. அதில் வேடிக்கை பாவனை தோன்றுகிறது. ஒருவன் சாப்பிட மறப்பது இயல்

பல்ல என்பது இதனால் பெறப்படுகிற தல்லவா? ஆனால் இது யார்க்கு? சிற்றறிவினர்க்கேயாம். பெரியார் பால் இக் குணம் காண முடியாது. கர்மயோகி, அஹிம்ஸா மூர்த்தி, அவதார புருஷர், அண்ணல் காந்தி தான் உணவருந்தும் நேரத்தை மறந்திருப்பார். காலமறிந்து கொண்டு கொடுக்கும்போது "ஓஹோ! நான் இப்பொழுது சாப்பிடும் நேரமா? நேரமாய் விட்டதா?" என்று கேட்டவாறே கொடுக்கும் பாலை அருந்திப் பின் தன் வேலையில் ஈடுபடுவார். "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்" என்று தமிழ் மறை கூறுகிறது. வயிற்றுக்கும் என்ற இழிவுச் சிறப்பும்மையாலும், ஈயப்படும் என்ற இழிந்த சொல்லாலும் வயிற்றுக்கே உணவு கொடுத்தல் எத்துணை இழி செயல் எனக்கருதி வந்திருக்கிறார் தெய்வப் புலவர். இன்னிசையோ, இனியார் வாய்ச் சொற்களோ, நற்றமிழ் வாணர் ஆற்றும் சொற்பொழிவுகளோ கேட்கும்போது நம்மையறியாமலே மணிக்கணக்கில் இருந்துவிடுகின்றோம். அது தீர்ந்ததும் மக்கள், சுற்றம், பசி, என்ற எண்ணங்கள் தலையெடுக்கின்றன.

இத்தகைய செவிச் செல்வத்தால் மக்கள் அடையும் நன்மை என்ன? தள்ளாடி நடக்கும் முதுமைப் பருவமுடைய ஒருவன் நடந்து செல்லும்போது தனக்குத் துணையாக அதாவது கீழ்வீழ்ந்து மண்டை உடையாம லிருப்பதற்காக ஓர் ஊன்றுகோலை எடுத்துக் கொள்வது வழக்கம். அதுவே அவனுடைய ஜீவாதாரமென்று தோன்றுகிறது. இயற்கனவே முதுமை யடைந்திருக்கும் அவன் சேற்று நிலத்தில் நடக்க நேரிட்டால் அவன் கதி என்னாகும்? அப்போது அவனுக்கு ஊக்கத்தை யூட்டி, சேற்று நிலத்தில் வீழ்ந்து மாயாமல் உதவி செய்வது ஓர் கோலல்லவா? அதேபோல் மாயையாகிய முதுமையும், ஆசையாகிய வழுக்குதலை யுடைய சேற்று நிலமும் நிறைந்த உலகத்தில் தவறி வீழ்ந்து அஞ்ஞானத்தி லமிழ்ந்து அவலப்படும்போது ஆறுதலளித்து நல்ல வழியில் கொண்டு செலுத்துவது ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லே. "அஞ்சுவ தோரு மறனே ஒருவனை வஞ்சிப்பதோரு மவா." ஆகவே ஆசைக்கே அஞ்சவேண்டும். இவ் வுண்மையை நமக்குப் புகட்டி ஆளாக்குவது "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் வாய்ச்சொல்." வறுமையினாலோ, பிற காரணங்களினாலோ நாம் மனத் தளர்ச்சி யடைந்து கோழையாகும்போது, மனக் கிளர்ச்சியை வருவித்து உள்ளத் தளர்வையும் வறுமையையும் விரட்டும் வழியைக் கற்பித்து, வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டு நேராக நடத்துவது அருள் ஒளி காட்டும் அறிவு படைத்த அறிஞர் வாய்ச் சொற்களே. "கற்றலிற் கேட்டலே நன்று."

கேள்வி யறிவுடையாரின் குணநலன்கள் குன்றின் மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்கும். அவர்கள் கிழோ ராயினும் தாழவுரைத்து அடக்கத்தோடு நடப்பர். பணிவுடைமையும், இன்சொலனாக இருத்தலும் ஒருவனுக்குச் சிறந்த அணியாம். மற்றைப் பொன்னாலும் மணியாலும் இயன்றவை அணிகளாகா. தான் என்னும் மமதை நீங்கித் தம்மை இழிவு படுத்துவாரிடத்தும், வணங்கிய வாயினராய் வாழவேண்டுமாயின் நுணங்கிய கேள்வி யினராயிருத்தல் வேண்டும். இப்பண்பு நூல்பல கற்றலினாலும் கற்றார் வாய்க் கேட்டலினாலுமே உண்டாகும். மிகுந்த கேள்விஞான முடையவர் தான் பிறழ உணர்ந்த வழியும் பேதைமை நிறைந்த சொற்களைச் சொல்ல மாட்டார்கள். அவ்வாறு மடமைச் சொற்களை நீக்கி அறிவுச் சுடர்களை வீசும் போது அவன் யாவராலும் புகழப்படுகின்றான். எல்லாரும் அவனுடன்பேசி ஆறுதலடையவும், ஐயங்களை நீக்கிக் கொள்ளவும் வருகின்றனர். இவ்வாறாக “செவியுணவிற் கேள்வியுடையார் அவியுணவின் ஆன்றாரோடொப்பார் நிலத்து” என்ற அவியுணவிற்குரிய தேவர்களோடு ஒக்கின்றனர். இந்நிலவுலகத்தில் தேவனாகி எல்லாராலும் மதிக்கப் படுவான். கிடைத்தற்கரிய இம்மாபெருஞ் சிறப்பினையளிக்கும் கேள்வி ஞானம் இல்லாதாரைத் திருவள்ளுவர் ஆறறிவுடைய மக்கட் கூட்டத்திலடக்காது, ஐந்தறிவுடைய மாக்களினத்தில் சேர்க்கின்றார். வடிவில் மக்களேயாகி அறிவில் மாக்களாகிய இவர்கள் இருந்தாலும் இறந்தாலும் உலகிற் குண்டாவதோர் பயனில்லையன்றோ!

“பூநாளும் தலை சுமப்பப் புகழ் நாமம் செவி கேட்ப” என்பது தேவாரம். மன்னுயிர்க்குள் மானிடர்க்கே விசேட அறிவை ஆண்டவன் அளித்திருக்கின்றான். அதனாலேயே “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்அரிது” என்றார் ஒருவர். “மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே” என்றார் அப்பர் பெருமான். அத்தகைய மனிதப் பிறவியெடுத்த நம் கடமை என்ன? நம் அறிவைப் பொலிவு பெறச் செய்ய வேண்டும்; சிவஞானம் பெற முயல வேண்டும்; உள்ளொளி வாய்ந்த உரவோர் வாய்ச் சொற்களை மனதில் கொள்ள வேண்டும். அன்பர்க் கெளியனாய் ஏழை பங்காளனாய், உள்ளுவார் உள்ளத்துள் ஊறும் தெள்ளமுதாய் இலங்கும் இறைவனின் இணையடிகள் துணை புரிவதாகுக!